# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் III பரீட்சை - 2026 சனவரி**

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**கண்ணோட்டம்:**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கிய **மூன்று பகுதிகளைக்** கொண்டிருந்தது.

1. **பகுதி A – 20 புள்ளிகளுக்காக** நான்கு (1 - 4) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.
2. **பகுதி B – 30 புள்ளிகளுக்காக** மூன்று (5 - 7) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.
3. **பகுதி C – 50 புள்ளிகளுக்காக** மூன்று (8 - 10) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது.

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினாவானது **(a)** இலாப - நட்டமற்ற புள்ளியை அலகுகளில் கணிக்கும்படியும் **(b)** மாதத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தை பாதிடப்பட்ட விற்பனை அளவில் கணிக்கும்படியும் கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் மொத்த மாறும் கிரயத்தைக் கணிப்பிடும்போது மாறும் மேந்தலைகளை உள்ளடக்கியிருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகள் இலாப – நட்டமற்ற புள்ளியைக் (BEP) கணிப்பதற்கு தவறான சூத்திரத்தைப் பிரயோகித்திருந்தனர்.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் இலாப – நட்டமற்ற புள்ளியைச் (BEP) சரியாகக் கணிப்பிட்டிருந்த அதே வேளை, அவர்கள் தரப்பட்ட அளவிற்கான இலாபத்தைக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

(4) இலாபத்தைக் கணிப்பதற்கான பங்களிப்புக்குப் பதிலாக விற்பனைப் பெறுமதி பயன்படுத்தப்பட்டது (உதாரணம்: பாதிடப்பட்ட நிலையான மேந்தலைச் செலவினங்களை, விற்பனைப் பெறுமதியில் இருந்து நேரடியாகக் கழித்தல்).

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

பரீட்சார்த்திகள் இதே மாதிரியான வினாக்களில் பயிற்சி பெற வேண்டும் என்பதுடன் BEP இன் கருத்து, எதிர்பார்க்கப்படும் இலாபம் என்பதன் கருத்து மற்றும் அவற்றைக் கணிப்பிடும் முறை போன்றவற்றையும் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

## வினா இல. 02

இவ்வினாவானது 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **Emmy Ltd.** இன் தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தைக் (WCC) கணிப்பிடுவதைப் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகளால் WCC சூத்திரத்தைப் பிரயோகிக்க முடிந்திருந்ததுடன் சுற்றுக்காலத்தை நியாயமான துல்லிய மட்டத்தில் கணிக்கவும் முடிந்திருந்தது. தொக்கு இருப்புக் காலம், வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம், மற்றும் வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலம் ஆகியன பொதுவாக அடையாளங் காணப்பட்டிருந்ததுடன் பொருத்தமானவாறு கூட்டிணைக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், சில பகுதிகளது கணிப்பீடுகளின் துல்லியத்தன்மை பரீட்சார்த்திகளுக்கிடையில் மாறுபட்டுக் காணப்பட்டது. இது சில சந்தர்ப்பங்களில் இறுதி WCC பெறுமானத்தைப் பாதித்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) ஒரு சில பரீட்சார்த்திகள் WCC சூத்திரத்தைத் தவறாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் WCC ஐக் கணிப்பிடுவதற்கு வியாபார சென்மதி தீர்ப்பனவுக் காலத்தை தொக்கு இருப்புக் காலம் மற்றும் வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம் ஆகியவற்றுடன் தவறாகச் சேர்த்திருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளைக் கூட்டி, இரண்டால் வகுப்பதன் மூலம் சராசரிக் கடன்கொடுத்தோர், கடன்பட்டோர், மற்றும் தொக்கு ஆகியவற்றைக் கணிப்பிட மறந்திருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலத்தைக் கணிப்பிடும்போது, கொள்வனவுகளின் பெறுமதிக்கு மாறாக விற்பனைக் கிரயத்தைப் பிரயோகித்திருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகள் கொள்வனவுகளின் பெறுமதியைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. கொள்வனவுகளைக் கணிப்பிடும்போது, விற்பனைக் கிரயத்திலிருந்து ஆரம்ப இருப்பைக் கழித்து, இறுதி இருப்பைக் கூட்டுவதற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகள் ஆரம்ப இருப்பைக் கூட்டி, இறுதி இருப்பைக் கழித்திருந்தனர்.

(6) தொழிற்படு மூலதனச் சுற்றுக்காலத்தைக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளைக் காட்டாது விடையை மாத்திரம் நாட்களில் எழுதியிருந்தனர்.

(7) சில பரீட்சார்த்திகள் பெறுமானங்களை நாட்களில் மாற்றுவதற்கு 365 இனால் பெருக்க மறந்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- பரீட்சார்த்திகள் இதேமாதிரியான வினாக்களில் பயிற்சி பெற வேண்டும்.
- பரீட்சார்த்திகள் தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தின் கருத்தையும் அதனைக் கணிப்பிடும் முறையையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

## வினா இல. 03

இவ்வினா **(a)** "பின்னூட்டக் கட்டுப்பாடு' மற்றும் "முன்னூட்டக் கட்டுப்பாடு' ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாட்டை விபரிக்குமாறும் **(b)** பாதிடலின் இரண்டு அணுகுமுறைகளைக் குறிப்பிடுமாறும் கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் கேட்கப்பட்டதைத் தவறாகப் புரிந்து கொண்டு, சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். அவர்கள் வினாவில் கேட்கப்பட்டதற்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக தமது சொந்தப் பதில்களை எழுதியிருந்தனர்.

(2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் உண்மையான மற்றும் திட்டமிடப்பட்ட வெளியீட்டிற்கிடையேயான வேறுபாட்டை விளக்காது அல்லது தேவையான திருத்தங்களைச் செய்வதற்கான மாற்றங்களை மேற்கொள்ளாது பெறுபேறுகளின் முன்னர் அல்லது பின்னர் எடுக்கப்படும் நடவடிக்கைகளை விபரிப்பது போன்ற பொதுவான விடைகளை வழங்கியிருந்தனர்.

(3) **பகுதி (b)** இற்கு, அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவில் குறிப்பாகக் கேட்கப்பட்டதற்குப் பதிலளிப்பதற்குப் பதிலாக பாதிடலின் வகைகள் (உதாரணம்: விற்பனைப் பாதீடு, காசுப் பாதீடு) பற்றி எழுதியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- இதே மாதிரியான கடந்தகால வினாக்களில் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கரு பற்றிய தெளிவான புரிதலைப் பெற பாடப் புத்தகத்தை சரியாகப் படிக்கவும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

## வினா இல. 04

இவ்வினா **Techno Ltd.** குறுகிய காலச் செயற்றிட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்பதை மதிப்பிடுமாறும், ஒவ்வொரு கிரயமும் தொடர்புடையதா அல்லது தொடர்பற்றதா என்பதைத் தீர்மானிக்குமாறும் கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் வணிகப் பகுப்பாய்வாளர் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் சம்பளங்களை தொடர்புடைய கிரயங்களெனவும் சோதனையாளர்களின் கிரயங்களை தொடர்பற்ற கிரயங்களெனவும் தவறாக அடையாளங் கண்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் ஒவ்வொரு கிரயமும் தொடர்புடையதா அல்லது தொடர்பற்றதா என்பதைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

(3) ஒரு சில பரீட்சார்த்திகள் மொத்த தொடர்புடைய கிரயம் மற்றும் செயற்றிட்டத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இலாபம் அல்லது நட்டம் ஆகியவற்றைக் கணிப்பிடுவதற்குப் பதிலாக, விவரண அல்லது இலகு – வகை விடைகளை எழுதியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- வினாவை மிகவும் கவனத்துடன் வாசித்து, கிரயங்கள் தொடர்புடையனவா அல்லது தொடர்பற்றனவா என்பதை அடையாளங் காணுதல் வண்டும்.
- பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற இதே மாதிரியான வினாக்களில் பயிற்சி பெற வேண்டும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

## <u>பகுதி B</u>

### வினா இல. 05

இவ்வினா 2026 சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் ஆண்டிற்கு 4% ஐப் பயன்படுத்தி வட்டி வருமானத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். ஆனால் உரிய மாதங்களுக்கான மாதாந்த வட்டி வருமானத்தைக் காட்டுவதற்கு அதனைப் 12 இனால் பிரிக்கத் தவறியிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் வட்டி வருமானத்தை அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

(3) பரீட்சார்த்திகளால் உரிய மாதங்களுக்கான எதிர்பார்க்கை விற்பனைகளைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை.

(4) ஏனைய மாறும் மேந்தலைச் செலவினங்கள் சரியாக முன்வைக்கப்படவில்லை.

(5) பெரும்பாலான பரீட்சார்த்திகள் உரிய மாதங்களின் மூலப் பொருள்களுக்கான கொடுப்பனவுகளை இனங்காணத் தவறியிருந்தனர்.

(6) சில பரீட்சார்த்திகள் ஆரம்ப மற்றும் இறுதி காசு மீதிகள் இரண்டையும் முன்வைக்கத் தவறியிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- இதே மாதிரியான கடந்தகால வினாக்களில் பயிற்சி பெறவும்.
- வினாவை மிகக் கவனத்துடன் வாசித்து, தேவையைப் புரிந்து கொள்ளவும்.
- பரீட்சார்த்திகள் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பரிவர்த்தனைகளின் காலப்பகுதியைக் கவனமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். குறிப்பாக, கடன் விற்பனைகள், காசு விற்பனைகள் மற்றும் கொடுப்பனவு விதிமுறைகளைக் கவனமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை.

## வினா இல. 06

இவ்வினாவானது **(a)** கிடைக்கத்தக்க கூலி (வளங்கள்) தொடர்பில் வரையறைக் காரணி/ காரணிகளை அடையாளங் காணுமாறும் **(b)** அடையாளங் காணப்பட்ட வரையறைக் காரணி/ காரணிகளின் அடிப்படையில் உகந்த உற்பத்திக் கலவையைத் தீர்மானிக்குமாறும் கேட்டிருந்தது. தரப்பட்ட வளக் கிடைப்பனவுடன் பாதிடப்பட்ட விற்பனை அலகுகளை அடைவதற்குத் தேவையான மொத்த வளங்களை ஒப்பிட்டு, வரையறைக் காரணியைச் சரியாக அடையாளங் கண்டதன் மூலம் பரீட்சார்த்திகள் தமது ஆற்றலை வெளிக்காட்டியிருந்தனர்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் வங்களின் மிகையை அல்லது பற்றாக்குறையை சரியாகக் கணிப்பிட்டிருந்தனராயினும் திறன்மிக்க கூலியின் மிகையை ஒரு பற்றாக்குறையாக முன்வைப்பது போன்ற இறுதி முடிவைத் தவறாக அறிக்கையிட்டிருந்தனர். இது புள்ளி குறைவதற்கு வழிவகுத்தது.

(2) சில பரீட்சார்த்திகள் வரையறைக் காரணிக்கான ஒரு மணித்தியாலத்திற்குரிய பங்களிப்பைக் கணிப்பிடும்போது, அலகொன்றின் மணித்தியாலங்களின் எண்ணிக்கையினால் ஓர் அலகிற்கான பங்களிப்பைத் பிழையாகப் பெருக்கியிருந்தனர்.

(3) ஒரு வரையறைக் காரணியின் கணிப்பிடப்பட்ட பங்களிப்பின் அடிப்படையிலான தர மதிப்பீடு பொதுவாக சரியாகச் செய்யப்பட்டிருந்தது.

(4) சில பரீட்சார்த்திகள் உகந்த உற்பத்திக் கலவையைக் குறிப்பிட்டிருக்கவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் அலகொன்றின் பங்களிப்பை கணிப்பிட்டிருந்தனர் எனினும் வரையறைக் காரணியைப் புறந்தள்ளி, பங்களிப்பை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு பொருள்களை தரமதிப்பீடு செய்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

## வினா இல. 07

இவ்வினாவில் சந்தைப் பெறுமதியைப் பயன்படுத்தி சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம், எடையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் (WACC) ஆகியவற்றைக் கணிப்பிடுவது பரீட்சிக்கப்பட்டிருந்தது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் மற்றும் மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். மேலும், அதிகளவான பரீட்சார்த்திகள் வரிக்குப் பின்னரான வட்டிக் கொடுப்பனவைச் சரியாக அடையாளங் கண்டதன் மூலம் மீட்கப்பட முடியாத தனிச்சங்களின் கிரயத்திற்கான கணிப்பீட்டைச் சரியாக அணுகியிருந்தனர். அத்துடன், **பகுதி (d)** இல், WACC ஆனது சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி

சரியாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தற்போது வர்த்தகம் செய்யப்படும் விலைகள் வினாவில் தரப்பட்டிருந்த போதிலும், பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகள் மற்றும் மீட்கத்தக்க தனிச்சங்களின் சந்தைப் பெறுமதியைக் கணிப்பிடுவதற்குச் சிரமப்பட்டிருந்தனர்..

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் பங்கிலாப வளர்ச்சி மாதிரியைப் பயன்படுத்தி சாதாரண பங்குகளின் கிரயத்திற்கான சூத்திரத்தைச் சரியாக எழுதி பெறுமானங்களைப் பிரதியிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சூத்திரத்தைத் தீர்க்கும்போது அவர்களிடம் கணித ஆற்றல் குறைவாக இருந்ததால் சரியான விடையைப் பெறத் தவறியிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகளால் பங்கிலாப வளர்ச்சிச் சூத்திரத்தைச் சரியாக எழுத முடியவில்லை. வளர்ச்சி வீதம் (g) ஐக் கூட்டுவதற்குப் பதிலாக அதனைப் பெருக்கியிருந்தமை ஒரு பொதுவான தவறாகக் காணப்பட்டது.

(3) அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** ஐச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சிலர் சூத்திரத்தைத் தவறாக எழுதியதன் காரணமாக தவறு விட்டிருந்தனர்.

(4) மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயமானது வரிக்குப் பின்னரான வட்டியைப் பயன்படுத்தி பொதுவாக சரியாகவே கணிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் சில பரீட்சார்த்திகள் காசுப் பாய்வுகள் பற்றி போதிய அறிவைக் கொண்டிருக்காததால் உட்பாய்வுகளை வெளிப்பாய்வுகளுடன் சேர்த்துக் குழப்பியிருந்ததுடன் வழங்கல் ஆண்டு பற்றியும் பிழையாக விளங்கியிருந்தனர். இது சரியான மீட்கத்தக்க ஆண்டை அடையாளங் காண்பதில் வழுக்கள் ஏற்பட வழிவகுத்தது.

(5) IRR ஐக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் சூத்திரத்தைச் சரியாக எழுதவில்லை, அதனைச் சரியாக எழுதியவர்கள்கூட அதற்குரிய பெறுமானங்களைச் சரியாகப் பிரதியிட்டிருக்கவில்லை; குறிப்பாக, பல பரீட்சார்த்திகள் IRR கணிப்பீட்டுக் காரணியில் மறைப் பெறுமானங்களைக் கையாளும்போது தவறு விட்டிருந்தனர்.

(6) வர்த்தகம் செய்யப்படும் விலைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பல பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகள் மற்றும் மீட்கத்தக்க தனிச்சங்களின் சந்தைப் பெறுமதியைத் தீர்மானிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

(7) சில பரீட்சார்த்திகள் WACC ஐ சந்தைப் பெறுமதிகளுக்குப் பதிலாக புத்தகப் பெறுமதிகளைப் பயன்படுத்திக் கணிப்பிட்டிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- வினாவைக் கவனமாக வாசித்து, வினாவில் தரப்பட்ட அறிவுறுத்தல்களை மாத்திரம் பிரயோகிக்கவும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

# பகுதி C

## வினா இல. 08

இவ்வினா இரண்டு செயற்றிட்டங்களின் நிகர இற்றைப் பெறுமதியைக் (NPV) கணிப்பிடுவதைப் பரீட்சித்திருந்ததுடன் அந்த இரு செயற்றிட்டங்களிலும் இருந்து சிறந்த முதலீட்டுத் தெரிவை அடையாளங் காணுமாறும் கேட்டிருந்தது. இது இலகுவான வினாவாக இருந்த போதிலும் ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். **செயற்றிட்டம் A** காரணமாக செயலாற்றுகை சராசரியாக இருந்தது.

எவ்வாறாயினும், பணவீக்கச் சீராக்கங்களைச் சரியாகக் காட்டாத சில பரீட்சார்த்திகளைத் தவிர, காசு உட்பாய்வுகள் மற்றும் காசு வெளிப்பாய்வுகள் அனைத்தையும் காட்டி, **செயற்றிட்டம் B** சரியாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

செயற்றிட்டங்கள் வெவ்வேறு காலப்பகுதிகளைக் கொண்டிருக்கும்போது, சிறந்த செயற்றிட்டத்தை எவ்வாறு கணிப்பிட்டு, அடையாளங் காண்பது என்பது பல பரீட்சார்த்திகளுக்குத் தெரியாதிருந்ததால் **பகுதி (b)** இற்கான விடைகள் திருப்திகரமானதாக அமையவில்லை. வெவ்வேறு ஆயுள் சுழற்சியுடன்கூடிய செயற்றிட்டங்களின் NPV-களை நேரடியாக ஒப்பீடு செய்ய முடியாது என்பதை ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாகப் புரிந்துகொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. சரியான அணுகுமுறையானது சமான ஆண்டுத்தொகையைக் கணிப்பிட்டு, சிறந்த செயற்றிட்டத்தைத் தெரிவு செய்ய அதனைப் பயன்படுத்துவதாகும்.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் செயற்றிட்டம் A ஐ மதிப்பீடு செய்யும்போது சரியான நான்கு-ஆண்டு காலப் பகுதிக்குப் பதிலாக ஐந்து ஆண்டுகள் ஈறாக மூலதன விடுதொகைகள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

(2) செயற்றிட்ட மதிப்பீட்டில் தேய்மானம் பிழையாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

(3) பல பரீட்சார்த்திகள் மூலதன விடுதொகைகளுக்கான சீராக்கங்களின் பின்னரான வரிவிதி இலாபத்தைச் சரியாகக் கணிப்பிடுவதற்குப் பதிலாக கணக்கீட்டு இலாபத்தைப் பயன்படுத்தியதன் மூலம் வரி பிழையாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(4) செயற்றிட்டம் B இன் மதிப்பீட்டில் நிலையான கிரயங்கள் தவிர்க்கப்பட்டிருந்தன. அத்துடன் சில பெறுமானங்கள் தவறாக ஆயிரங்களில் காட்டப்பட்டிருந்த அதே வேளை ஏனையவை மில்லியன்களில் காட்டப்பட்டிருந்தன.

(5) கழிவு வீதம் 15% என வினாவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் தவறான வீதங்களைப் பயன்படுத்தியிருந்தனர்.

(6) பல விடைகளில் பல்வேறு கணிப்பீட்டு வழுக்கள் அவதானிக்கப்பட்டன.

(7) பகுதி (b) இற்கு, அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்க முயற்சிக்கவில்லை என்பதுடன் சமான ஆண்டுத்தொகை முறையைப் பயன்படுத்தி வெவ்வேறு செயற்றிட்டக் காலப்பகுதிக்கு NPV ஆனது சீராக்கப்பட வேண்டும் என்பது பற்றிய புரிதல் பல பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை.

(8) காசுப் பாய்வுகள் அல்லாத மூலதன விடுதொகைகள் செயற்றிட்ட மதிப்பீட்டில் தவறாக உள்ளடக்கப்பட்டிருந்தன.

(9) ஒரு சில பரீட்சார்த்திகள் NPV ஐக் கணிப்பிடாது தீர்மானம் எடுத்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களில் உள்ள இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.
- கழிவீட்டு நோக்கங்களுக்காக வினாவில் தரப்படும் மூலதனக் கிரயத்தை (கழிவீட்டுக் காரணி) பயன்படுத்தவும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

**வினா இல. 09**

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது முரண் பகுப்பாய்வு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. இங்கு விற்பனை விலை முரண், நேர் பொருள் விலை முரண், நேர் பொருள் கலவை முரண், நேர் பொருள் விளைவு முரண் ஆகியவற்றைக் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நேர் பொருள் கலவை முரண் மற்றும் நேர் பொருள் விளைவு முரண் ஆகியவற்றைக் கணிப்பிடச் சிரமப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

வினாவின் **பகுதி (b)** ஆனது, உண்மையான பங்களிப்புடன் பாதிடப்பட்ட பங்களிப்பை இணக்கம் செய்வதற்கான தொழிற்பாட்டுக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் முரண்களைக் கணிப்பிடுவதற்கான சூத்திரங்கள் பற்றிய அறிவைக் கொண்டிருக்கவில்லை.

(2) சூத்திரங்கள் பற்றி அறிந்திருந்த சில பரீட்சார்த்திகளுக்கு உரிய சூத்திரத்தில் தரவுகளைச் சரியாக பிரயோகிப்பதற்கு முடியாது போயிருந்தது.

(3) நேர் பொருள் விலை முரணைக் கணிக்கும்போது, பயன்படுத்தப்பட்ட உண்மையான பொருளுக்குப் பதிலாக உண்மையான விற்பனை அளவு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(4) போதிய பயிற்சி காணப்படாமை அவதானிக்கப்பட்டது. குறிப்பாக உண்மையான / நியமக் கலவையைப் பயன்படுத்தி நேர் பொருள் கலவை மற்றும் விளைவு முரண்களைக் கணிப்பிடும்போது இதனை அவதானிக்க முடிந்தது.

(5) சில பரீட்சார்த்திகள், கணிப்பிடப்பட்ட முரண்கள் சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதைக் குறிப்பிடவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் சாதகமான முரண்களைப் பாதகமான முரண்களாகவும் பாதகமான முரண்களைச் சாதகமான முரண்களாகவும் பிழையாக அடையாளங் கண்டிருந்தனர்.

(7) சில பரீட்சார்த்திகள் நிலையான மேந்தலை செலவின முரணை தொழிற்பாட்டுக் கூற்றில் தவறாக உள்ளடக்கியிருந்தனர்.

(8) ஒரு சில பரீட்சார்த்திகள் உண்மையான பங்களிப்பை பாதிடப்பட்ட பங்களிப்புடன் இணக்கம் செய்யும் ஒரு முழுமையான தொழிற்பாட்டுக் கூற்றைத் தயாரிப்பதற்குப் பதிலாக வெறுமனே பாதகமான மற்றும் சாதகமான முரண்களைப் பட்டியலிட்டிருந்தனர்.

(9) பாதிடப்பட்ட பங்களிப்புக்காக, சில பரீட்சார்த்திகள் அலகொன்றின் பங்களிப்புக்குப் பதிலாக விற்பனை விலையைப் பிழையாகப் பயன்படுத்தியிருந்தனர்.

(10) வினாவானது பங்களிப்பு இணக்கத்தைக் கேட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் பாதிடப்பட்ட பங்களிப்புக்குப் பதிலாக பாதிடப்பட்ட இலாபத்தை இணக்கம் செய்ய முயற்சித்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாத்தாள்களில் உள்ள இதே மாதிரியான வினாக்களில் பயிற்சி பெறவும். எப்பொழுதும் உங்கள் செய்முறைகளைக் காட்டவும்.
- பாடப்புத்தகத்தைப் பின்பற்றுவதுடன் நடைமுறைப் பிரயோகங்களையும் மேற்கொள்ளவும்.
- பரீட்சார்த்திகள் வெவ்வேறு சூழ்நிலைகளில் உள்ள முரண்களின் சூத்திரங்களில் பயிற்சி பெற வேண்டும்.
- முரண் பகுப்பாய்வில் உள்ள சரியான பிரயோகத்துடன் சூத்திரத்தை முன்வைக்கவும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

## வினா இல. 10

இவ்வினாவின் **பகுதி (A)** ஆனது சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் **செயன்முறை 3** கணக்கையும் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. பரீட்சார்த்திகள் பிரதானமாக **செயன்முறை 3** கணக்கை தயாரிப்பதற்கான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றைத் தயாரிப்பதற்கான அவர்களின் அறிவு போதியதாக இருக்கவில்லை. குறிப்பாக, சாதாரண நட்டத்திற்கான சமான அலகுகளைக் கணிப்பிடுவதில் போதிய அறிவு காணப்படவில்லை.

இவ்வினாவின் **பகுதி (B)** ஆனது வெவ்வேறு தீர்மானங்களில் இருந்தான பங்களிப்பைக் காட்டும் விளைவாய்வு அட்டவணையைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கோரியிருந்ததுடன் மிகைமிகை தேர்வு நிபந்தனையின் கீழ் எந்தப் பொருளை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதை அடையாளங் காணுமாறும் கேட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு எவ்வித புள்ளிகளையும் பெற்றுக் கொள்ளவில்லை. சில பரீட்சார்த்திகள் **பகுதி (B)** ஐ முழுமையாகத் தவிர்த்திருந்தனர். ஏனையவர்கள் பொருள் ஒன்றின் பங்களிப்பைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர் எனினும் போதிய பயிற்சி இன்மையால் மேலும் தொடர்வதற்கு அவர்களால் இயலாது போயிருந்தது.

**பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) சில பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட பெறுமானங்களைப் பயன்படுத்தி **செயன்முறை 3** கணக்கையும் சமான அலகுகள் கூற்றையும் தயாரித்திருந்தனர் என்றாலும் அதனைத் தொடர்ந்துவரும் கணிப்பீடுகளை அவர்களால் மேற்கொள்ள முடியாதிருந்தது.

(2) பரீட்சார்த்திகள் சமான அலகுகள் கணிப்பீடுகளில் ஆரம்பப் புத்துருவாகும் வேலைகளை உள்ளடக்கியிருந்தனர். ஆனால் அலகொன்றின் மொத்த சமான கிரயத்தைக் கணிப்பிடும்போது ஆரம்ப WIP இன் பெறுமதியைக் கூட்டிணைக்க பெரும்பாலும் தவறியிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் அலகுக் கிரயத்தைக் கணிப்பிடும்போது, சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதியை மூலப் பொருள் கிரயத்திலிருந்து கழிக்கத் தவறியிருந்தனர், இது அலகொன்றின் கிரயத்தை மிகைப்படுத்திக் கூறுவதற்கு வழிவகுத்தது.

(4) இதற்கு மாறாக, சில பரீட்சார்த்திகள் மூலப் பொருள்கள், கூலி, மற்றும் மேந்தலைகள் ஆகிய மூன்று கிரயக் கூறுகளிலிருந்தும் சாதாரண நட்டத்தின் ஒடிவுப் பெறுமதியைக் கழித்திருந்தனர். இது தவறானதாகும்.

(5) சில பரீட்சார்த்திகள் சமான அலகுகளைக் கணிப்பிடும்போது தவறாக சாதாரண நட்டத்தை சீராக்கம் செய்திருந்தனர்.

(6) அலகொன்றின் மொத்த சமான கிரயத்தைக் கணிப்பிடும்போது ஆரம்பப் புத்துருவாகும் வேலைகளின் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை.

(7) சில பரீட்சார்த்திகள் பெறுமதிகளையோ அல்லது அளவுகளையோ மாத்திரம் பயன்படுத்தி, அளவுகள் மற்றும் பெறுமதிகள் இரண்டையும் காட்டி **செயன்முறை 3** கணக்கைத் தயாரிக்கத் தவறியிருந்தனர்.

(8) சில பரீட்சார்த்திகள் இறுதிப் பொருள்களின் பெறுமதி, அசாதாரண நட்டம், மற்றும் வேலை நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி **செயன்முறை 3** கணக்கின் மதிப்பீடு தொடர்பான வேலைகளைக் காட்டியிருக்கவில்லை.

(9) சில பரீட்சார்த்திகள் செயன்முறைக் கணக்கு மற்றும், கிரயம் மற்றும் சமான அலகுகளைக் காட்டும் கூற்று ஆகியவற்றுக்கான சரியான வடிவத்தைப் பின்பற்றவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தில் உள்ள உதாரணங்களையும் கடந்த கால வினாக்களையும் செய்து பார்த்து பயிற்சி பெறுதல் வேண்டும்.
- பாடப் புத்தகத்திலுள்ள தொடர்புடைய அத்தியாயங்களை நன்கு வாசிக்கவும்.

**செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.

-------

**பகுதி (A)** பொதுவாக நன்றாக விடையளிக்கப்பட்டிருந்தது. இது பரீட்சார்த்திகளின் ஆழமான புரிதலைக் காட்டுகிறது. எவ்வாறாயினும் **பகுதி (B)** இற்கான விடைகள் திருப்திகரமானதாக அமையவில்லை. இது அறிவுக்கான இடைவெளியையும் தேவையைச் சரியாகப் புரிந்துகொள்ளாத தன்மையையும் காட்டுகிறது.

- * * * -